பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை - 4

**06 01 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழ், கன்னடம், தெலுகு, மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய செம்மொழயின் இலக்கியப் படைப்புகளை மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று புதுதில்லியில் வெளியிடுகிறார்.

2. தெலங்கானா மாநிலம் ரெங்காரெட்டி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவிலேயே மிகப்பெரிய உள்நாட்டு மீன் பண்ணையை மத்திய அமைச்சர்கள் திறந்து வைத்தனர்.

3. நடப்பு நிதியாண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் இந்திய ரயில்வே தனது மொத்த மூலதன செலவில் **80** சதவீதத்திற்கும் மேலான நிதியைப் பயன்படுத்தியுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. வட மாநிலங்களில் கடும் மூடுபனி மற்றும் குளிர் அலை வீசும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அபுதாபியில் நடைபெற்ற **Carting** சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் **11** வயதான அதிகா மிர் பங்கேற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழ், கன்னடம், தெலுகு, மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய செம்மொழயின் இலக்கியப் படைப்புகளை மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று புதுதில்லியில் வெளியிடுகிறார்.

செம்மொழிகளுக்கான சிறப்பு ஆய்வு மையங்களால் உருவாக்கப்பட்டுள்ள **41** இலக்கியப் படைப்புகளை அவர் வெளியிடுகிறார்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் **13** புத்தகங்களை அவர் வெளியிடுகிறார்.

திருக்குறளில் **45** அத்தியாயங்களைக் கொண்ட சைகை மொழி விளக்கத்தொடரும் இன்று வெளியிடப்படுகிறது.

இது மாற்றுத்திறனாளிகளுக்கு திருக்குறளை கொண்டு சேர்க்கும் ஒரு முயற்சி என்று திரு. தர்மேந்திர பிரதான் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவிலேயே மிகப்பெரிய உள்நாட்டு மீன் பண்ணை, தெலங்கானா மாநிலம் ரெங்காரெட்டி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பண்ணையை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் மற்றும் மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

வெப்பமான காலநிலையிலும், குளிரூட்டப்பட்ட நீரில் வளரும் மீன் இனங்கள் உயிரி வாழும் வகையில் புதிய தொழில்நுட்பம் இந்த மீன் பண்ணையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஏற்றுமதி அதிகரிக்கும் என்று திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் இந்திய ரயில்வே தனது மொத்த மூலதன செலவில் 80 சதவீதத்திற்கும் மேலான நிதியைப் பயன்படுத்தியுள்ளது.

2025ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டில் 2 லட்சத்து 52 ஆயிரத்து 200கோடி ரூபாயில் 2 லட்சத்து 3 ஆயிரத்து 138 கோடி ரூபாயை இந்திய ரயில்வே செலிவட்டுள்ளது.

குறிப்பாக பாதுகாப்பு நடவடிக்கைகள், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் அதிக முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 164 வந்தேபாரத் ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், நாட்டில் 99 சதவீதத்திற்கும் அதிகமாக அகல ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வுக் கூட்டம் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தலைமையில் நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிளாஸ்டிக் மின்னணு கழிவுகள் மற்றும் பேட்டரிகள் ஆகியவற்றில் இருந்து வரும் கழிவுகளை நிர்வகிப்பதற்கான் வழிகாட்டுதல் குறித்து விவாதிக்கப்பட்டது.

மின்னணு வர்த்தக தளம் அமைப்பது தொடர்பான ஆலோசனைகள் நடத்தப்பட்டதாக திரு. பூபேந்தர் யாதவ் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

**Bimstec** நாடுகளுக்கான புற்றுநோய் சிகிச்சைக்கான சிறப்பு பயிற்சி திட்டத்தின் இரண்டாம் கட்டம் விசாகப்பட்டினத்தில் உள்ள ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் இணை செயலாளர் திரு. சி.எஸ்.ஆர். ராம் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதில் பங்களாதேஷ், பூடான், மியான்மர், இலங்கை, தாய்லாந்து மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இந்த நாடுகளில் அதிகரித்து வரும் புற்றுநோய் பாதிப்பு மற்றும் தரமான சிகிச்சை கிடைப்பதில் உள்ள சவால்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த திட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி தற்போது இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் கட்டண ஒழுங்குமுறை வாரியத்தின் முதல் கூட்டம் மும்பையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்டணம் மற்றும் தீர்வு முறைகள் துறையின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது.

உள்நாடு மற்றும் உலகளாவிய கட்டண முறைகள் தொடர்பான முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

ரிசர்வ் வங்கி சமீபத்தில் நடத்திய மின்னணு பரிவர்த்தனை குறித்த ஆய்வின் முடிவுகளையும் இந்த வாரியம் ஆய்வு செய்தது.

<<<<>>>>

தேசத்தைக் கட்டமைப்பதில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய மாணவர் படையினருக்கான பயிற்சி முகாமை அவர் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ஆபரேஷன் சிந்தூர் மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளின்போது சுமார் 75 ஆயிரம் என்.சி.சி. மாணவர்கள் பங்கேற்றதை பாராட்டிப் பேசினார்.

இன்றைய மாணவர்கள் இந்தியாவின் புதிய முகம் என்று குறிப்பிட்ட அவர், போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் தேசிய மாணவர் படையினர் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த முகாமில் 898 மாணவிகள் உட்பட 2 ஆயிரத்து 406 பேர் பங்கேற்றுள்ளனர்.

<<<<>>>>

இந்திய — பிரான்ஸ் இளம் திறமையாளர்களுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் எஸ். ஜெய்சங்கர் பாரீசில் கலந்துரையாடினார்.

பிரான்ஸ் — இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் உலகில் நடைபெற்று வரும் மாற்றங்கள் மற்றும் அந்தச் சூழலில் இரு நாடுகளுக்கு இடையிலபான ஒத்துழைப்பு குறித்து அவர் விவாதித்ததாக தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பாரீசில் அந்நாட்டுத் தலைவர்களை சந்தித்து இரு நாடுகளுக்கு இடையிலான உத்திசார் கூட்டாண்மையின் முன்னேற்றம் மற்றும் உலகளாவிய விஷயங்கள் குறித்து அவர் கலந்துரையாடுகிறார்.

பின்னர் தனது பயணத்தின் இரண்டாம்கட்டமாக லக்ஸம்பர்க் செல்கிறார்.

<<<<>>>>

மனிதர்களுக்கு மாற்றாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இருக்காது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொள்வதன் மூலம் அந்தத் துறையில் நிலைத்திருக்க உதவும் என்றும் கூறினார்.

உலகத்தோடு போட்டி போடுவதற்குத் தேவையான கருவியை மாணவர்களுக்கு தமது அரசு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

உலகம் உங்கள் கையில் என்ற எண்ணத்தோடு உலகை வென்றுவர வாழ்த்துவதாக அவர் கூறினார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கை குறித்து முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி முன்வைத்துள்ள புகார்களை தேர்தல் ஆணையம் நிராகரிக்க வேண்டும் என்று அம்மாநில பிஜேபி தலைவர் திரு. சுவேந்து அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தேர்தல் ஆணையத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் திரிணாமுல் காங்கிரஸ் பல ஆண்டுளாக தேர்தலில் முறைகேடு செய்வதற்காக பாதுகாத்து வந்த போலி வாக்காளர்கள் மற்றும் சட்டவிரோத ஊடுருவல்காரர்கள் வெளிச்சத்திற்கு வந்துவிடுவார்கள் என்பதால் செல்வி. மம்தா பானர்ஜி வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதாக திரு. சுவேந்து அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

வட மாநிலங்களில் கடும் மூடுபனி மற்றும் குளிர் அலை வீசும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிஹார், கிழக்கு உத்தரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் மூடுபனிக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், ராஜஸ்தான், சத்தீஸ்கட், ஒடிசா மற்றும் மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் கடும் மூடுபனி நிலவும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, ஜார்கண்ட், கிழக்கு ராஜஸ்தான், ஹரியானாவில் வரும் வியாழக்கிழமை வரை குளிர் அலை வீசும் என்று தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தில்லிக்கு செல்லும் ரயில்கள் தாமதமாக வந்துகொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும் தில்லியின் காற்று தரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

அபுதாபியின் புகழ்பெற்ற **Yas Marina Forumula-One** ஓடுபாதையில் நடைபெற்ற **Carting** சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் 11 வயதான அதிகா மிர் பங்கேற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஜூனியர் பிரிவில் பங்கேற்ற அவர் உலக அளவில் முதல் 5 இடங்களுக்குள் வந்த முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.

-----------------

மலேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் கோலாலம்பூரில் இன்று தொடங்குகின்றன.

இந்த தொடரில் 2 முறை ஒலிபிக் பதக்கம் வென்ற இந்தியாவின் பி.வி.சிந்து, மாளவிகா பன்சோட் மற்றும் உன்னதி ஹூடா ஆகியோர் களம் காண்கின்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென், ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சிராக் ஷெட்டி - சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி ஆகியோர் விளையாடுகின்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் த்ரிஷா ஜோலி காயத்தி கோபிசந்த் இணை விளையாட உள்ளது.

**<<<<The End>>>>**